நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

20 June 2015

2015

தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு (ஆண்டு 6, 7, 8)
Level : Intermediate - Lower (Year 6, 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து 1 முதல் 5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## தூங்கும் விதம்

ஒட்டைச் சிவிங்கி நின்று கொண்டே
நன்று தூங்கிடும்
உயரே வௌவால் தலைகீழாகத்
தொங்கித் தூங்கிடும்
சிட்டுக் குருவி மரத்தின் கிளையைப்
பற்றித் தூங்கிடும்
சின்னப் பாப்பா தொட்டிலுக்குள்
படுத்துத் தூங்கிடும்
கண்ணை மூடி நாமெல்லாரும்
நன்கு தூங்குவோம்
கண்ணைத் திறந்தபடியே மீனும்
பாம்பும் தூங்கிடும்
என்ன காரணத்தினாலே
என்று தெரியுமா
இவைகளுக்குக் கண்ணைமூட
இமைகள் இல்லையே

1) சின்ன பாப்பாக்கள் எங்கு தூங்குவர்

a) கட்டிலில் b) அம்மா அருகில்

c) தொட்டிலில் d) பாயில்

2) பாம்புக்கும் மீனுக்கும் எவை இல்லை என்று இந்த பாடல் சொல்கிறது?

a) கண்கள் b) இமைகள்

c) காதுகள் d) இவை எதுவும் இல்லை

3) சிட்டுக்குருவி எதனைப் பற்றிக்கொண்டு தூங்கும்?

a) மரத்தின் கிளையை b) மரத்தின் இலையை

c) மரத்தின் வேரை d) மரத்தின் கொடியை

4) இப்பாடலில் எத்தனை பறவை இனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

a) 1 b) 2 c) 3 d) 4

**5 முதல் 8 வரையிலான வினாக்களில் தமக்குள் வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க.**

5) a) அம்மா b) அண்ணா
c) அக்கா d) பூனை

6). a) காய்கறி b) பழங்கள்
c) தளபாடம் d) கிழங்குகள்

7). a) பெற்றோர் b) ஆசிரியர்
c) வைத்தியர் d) சமையற்காரர்

8). a) குழந்தைகள் b) வயோதிபர்கள்
c) பிள்ளைகள் d) சிறுவர்கள்

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 9 முதல் 13 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள்**

சிறியவர்கள், பெரியவர்கள் என எல்லோரும் அவர்களுடைய வயதுக்கும் ஆரோக்கியத்துக்கும் ஏற்றவாறு உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

- வேகமாக நடப்பது, மெதுவாக ஓடுவது, சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது, படகு ஓட்டுவது, தோட்ட வேலை செய்வது போன்ற செயல்களில் ஈடுபடலாம்.
- கூடைப்பந்து, டென்னிஸ், கால்பந்து போன்ற விளையாட்டுக்களை விளையாடலாம்.
- வியர்வை சிந்தும் அளவிற்கு உடற்பயிற்சி செய்தால் அது மிதமான உடற்பயிற்சி.
- மூச்சு இரைக்க வைக்கும் அளவிற்கு உடற்பயிற்சி செய்தால் அது தீவிரமான உடற்பயிற்சி.
- உடற்பயிற்சி செய்வதால் வரும் நன்மைகள் – நன்றாக தூக்கம் வரும் சுறுசுறுப்பாக இருக்க முடியும் எலும்புகளும், தசைகளும் உறுதியாக இருக்கும், நீண்ட நாள் வாழ முடியும்.

9) உரைப்பகுதி எதைப்பற்றிப் பேசுகிறது? ______________
a) ஓடுவது b) நீண்ட நாள் வாழ்வது
c) உடற்பயிற்சி செய்வது d) வேலை செய்வது

10) உடற்பயிற்சி செய்தால் ______________ இருக்க முடியும்
a) சுறுசுறுப்பாக b) சோம்பேறியாக
c) இளமையாக d) அழகாக

11) ஆரோக்கியம் என்பது

a) சுகம்
b) சோம்பேறி
c) நோயாளி
d) வயது

12) இந்த உரைப்பகுதியில் குறிப்பிட்டிருக்கும் ஒரு விளையாட்டு எது?

a) சமைத்தல்
b) தோட்ட வேலை
c) வேகமாக நடத்தல்
d) கூடைப்பந்து

13) மிதமான உடற்பயிற்சி என்பது :

a) மூச்சு இரைக்க உடற்பயிற்சி செய்வது
b) சைக்கிள் ஓட்டுவது
c) வியர்வை சிந்தும் அளவிற்கு உடற்பயிற்சி செய்வது
d) வேகமாக ஓடுவது

**14 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

14. 'ஏழ் கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழியவே' என்பதில் இசை என்பதன் பொருள்

a) நல்லிசை
b) புகழ்
c) அருள்
d) மணம்

15. திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலை அமைந்துள்ள இடம்

a) சிட்னி
b) சென்னை
c) கன்னியாகுமரி
d) யாழ்ப்பாணம்

16. இராஜராஜசோழன் ஆட்சி செய்த தமிழ் நிலத்தின் தலைநகரம்

a) மதுரை
b) திருச்சி
c) எட்டயபுரம்
d) தஞ்சாவூர்

17. மலையும் மலைசார்ந்த இடமும் என்று கூறப்படும் நிலத்தின் பெயர்

a) குறுஞ்சி
b) முல்லை
c) மருதம்
d) நெய்தல்

18. மகாகவி பாரதி பிறந்த இடம்

a) தஞ்சாவூர்
b) புதுச்சேரி
c) திருச்சி
d) எட்டயபுரம்

**19 முதல் 22 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்குப் பொருத்தமான எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க:**

19) நாங்கள் **தீமையை** எதிர்த்து நின்றோம்

a) தாழ்மையை b) நன்மையை

c) கொடுமையை d) மேன்மையை

20) இன்று வெயில் **சூடாக** இருந்தது

a) வெப்பமாக b) மோசமாக

c) குளிராக d) மென்மையாக

21) நாங்கள் வீட்டை **அசுத்தமாக** வைத்திருக்கலாமா?

a) துப்புரவாக b) சுத்தமாக

c) அழகாக d) வடிவாக

22) எனது நண்பன் என்னை விட மிக **உயரம்**.

a) அகலம் b) குட்டை

c) அகலம் d) நீளம்

**23 முதல் 27 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க**

23) நீதி வழங்குபவர் :

a) வழக்கறிஞர் b) குற்றவாளி

c) நீதிபதி d) ஆசிரியர்

24) தளபாடம் செய்பவர் :

a) ஆசிரியர் b) அப்பா

c) தச்சர் d) மாணவர்

25) மட்பாண்டம் செய்பவர் :

a) வேடர் b) தச்சர்

c) குயவர் d) சிற்பி

26) பின்வருவனவற்றுள் ஔவையார் எழுதாத நூல் :

a) ஆத்திசூடி b) கொன்றை வேந்தன்

c) நல்வழி d) நாலடியார்

27) கம்பர் எழுதியது :

a) குழந்தைப்பாடல்கள் b) திருக்குறள்

c) இராமாயணம் d) மகாபாரதம்

**28 முதல் 31 வரையுள்ள வினாக்களுக்கு எழுத்துப்பிழையற்ற சொல்லை தெரிவு செய்க:**

28) நாங்கள் ______________ யில் பாட்டு கேட்டோம்

a) வானொலி b) வானொளி

c) வானோலி d) வானோளி

29) நான் நண்பர்களுடன் தமிழ் ______________ பார்த்தேன்

a) திறைப்படம் b) திரைப்படம்

c) திறப்படம் d) திரப்படம்

30) தம்பியும் தங்கையும் பந்து அடித்து ______________

a) விளயாடினார்கள் b) விலயாடினார்கள்

c) விளையாடினார்கள் d) விலையாடினார்கள்

31) ______________ பெய்ததால் குடை பிடித்தோம்

a) பலத்த மழை b) பளத்த மழை

c) பளத்த மழ d) பலத்த மழ

**32 முதல் 35 வரை உள்ள வினாக்களில் சரியான வாக்கியத்தை தெரிவு செய்க:**

32) a) கைப்பேசி மாமா வாங்கினார்

b) மாமா கைப்பேசி வாங்கினார்

c) வாங்கினார் மாமா கைப்பேசி

d) வாங்கினார் கைப்பேசி மாமா

33) a) குழந்தைகள் இருக்க வேண்டும் சுறுசுறுப்பாக

b) சுறுசுறுப்பாக குழந்தைகள் இருக்க வேண்டும்

c) குழந்தைகள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்

d) சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் குழந்தைகள்

34) a) இக்கரைக்கு பச்சை அக்கரை

b) அக்கரைக்கு பச்சை இக்கரை

c) இக்கரைக்கு அக்கரை பச்சை

d) அக்கரைக்கு இக்கரை பச்சை

35) a) பாடல்கள் எல்லாம் இனிமையானவை பாரதியார்

b) பாரதியார் எல்லாப்பாடல்களும் இனிமையானவை

c) பாரதியார் பாடல்கள் எல்லாம் இனிமையானவை

d) இனிமையானவை எல்லாம் பாரதியார் பாடல்கள்

**36 முதல் 40 வரையுள்ள சொற்களை சேர்த்து எழுதுக:**

36) குருவி + கூடு ________________

37) வெள்ளை + கற்கள் ________________

38) மழை + துளி ________________

39) கறுப்பு + பலகை ________________

40) கோழி + குஞ்சு ________________

**பின்வரும் உரைப்பகுதியில் காணப்படும் இடைவெளிகளை, பின்வரும் சொற்களைக் கொண்டு நிரப்புக. ஒரு சொல்லை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தலாம்.**

a) ஆற்றலை b) அழுத்தத்தை c) பெரிதாக

d) அசைகிறதா e) உணர்ந்து

## பூனையின் மீசை

தன்னைச் சுற்றி இரை எங்கே இருக்கிறது, அது 41. ........................ இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கு பூனையின் மீசை பயன்படுகிறது. ஏன் என்றால் சிறிய 42. ........................

கூட பூனையின் மீசையால் 43. ........................ கொள்ள முடியும். அது மட்டுமல்ல ஏதாவது ஒரு பொந்துக்குள் போவதற்கு முன்னால் அது எவ்வளவு 44. ........................ இருக்கிறது என்று பூனை தன் மீசையைக் கொண்டு தெரிந்து கொள்ளும். ஆனால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. பூனையின் மீசை வெட்டப்பட்டால், தன்னுடைய 45. ........................ பூனை சிறிது காலத்திற்கு இழந்து விடுகிறது.

**46. எழுத்து ஆக்கம்**

தமிழ்ப் பாடசாலையில் நீங்கள் பெற்ற அனுபவத்தை 50 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2015